**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**

**NAGAPATTINAM.**

**C.C.466/2020 –** P.W.1

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. ராமன் | Father's Name. தர்மராஜ் |
| Village : நாகூர் | Age: 38 |
| Date :13.02.2026 | தொழில் : ஆட்டோ டிரைவர் |

நம்பர்: 9159110009

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th day of February 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheswari (Name of the Interpreter)**

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of February 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜர்)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் கதவு எண்.104 அமிர்தாநகர், வண்ணான் குளம் மேற்கரை, நாகூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனது அப்பா பெயர் தர்மராஜ். பொதுவாக அவரை தர்மலிங்கம் என்று அழைப்பார்கள். நான் ஆட்டோ ஓட்டுனராக வேலைப்பார்த்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன வசந்தா எனது அம்மா. நான் கடந்த 06.10.2018ம் தேதி நாகூர் பீச்சில் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்தபோது, நாகூர் தெத்தியில் உள்ள எனது நண்பர்

அப்துல்ரஹ்மான் என்பவர் எனக்கு போன் செய்து, அன்று பிற்பகல் 3 அல்லது 3.30 மணியளவில், எனது அம்மா நாகூர் மெயின் ரோட்டில், மறைக்கார் லாட்ஜ் முன்பு, மார்கெட்டுக்கு சென்றுவிட்டு சாலையின் இடதுபுறம் ஓரமாக நடந்து வந்த என் அம்மாமீது வாஞ்சூரில் இருந்து நாகப்பட்டினம் நோக்கி, வந்த PY 02 Q 5304 என்ற யமகா இருசக்கர வாகனம் மோதிவிட்டதாகவும், அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் குடிபோதையில் இருந்ததாகவும், அவர் நிதானம் இன்றி, மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து என் அம்மாவின் பின்புறத்தில் மோதிவிட்டதாகவும், எனது அம்மாவின் தலை முடி அந்த இருசக்கர வாகன சக்கரத்தில் மாட்டிய பின்னரும், இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வண்டியை நிறுத்தாமல் சிறிது தூரம் தரதரவென இழுத்து சென்றதாகவும், உடனடியாக அங்கிருந்தவர்கள், அதை பார்த்து அந்த வண்டி சக்கரத்தில் மாட்டியிருந்த எனது அம்மாவின் தலைமுடியை கட் செய்தததாகவும் கூறினார்.

நான் உடனடியாக சம்பவ இடம் சென்று பார்த்தபோது எனது அம்மாவிற்கு தலைமுடி அறுந்த நிலையில் தலையில் பலத்த காயமுற்று இருந்தார். நானும் எனது தம்பி லெட்சுமணணும் எனது அம்மாவை என்னுடைய ஆட்டோவிலேயே நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம். இங்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு, மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு எனது தாயார் சிகிச்சை பலனின்றி அன்றே மாலை சுமார் 6 அல்லது 6.30 மணிக்கு இறந்துவிட்டார்.

அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் கீச்சாங்குப்பத்தை சேர்ந்த சபரிநாதன் என்று சொன்னார்கள். நான் அவரை சம்பவ இடத்தில் பார்க்காததால் யார் என்று எனக்கு அடையாளம் தெரியாது. எனது அம்மா இறந்தவுடன், நானும் எனது நணபர் ரவிச்சந்திரனும் உடனடியாக நாகூர் காவல் நிலையத்திற்கு

வந்தோம். அங்கு நான் புகார் கொடுத்தேன். தற்போது காட்டப்படும் புகார்தான் நான் கொடுத்தது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் **அதசாஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல இந்த விபத்து ஏற்பட்டதாக நான் கொடுத்தாக சொல்லப்படும் அதசாஆ.1றான புகாரிலும், குவிமுச பிரிவு 161(3)ன் படியான எனது வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்போது காட்டப்படும் அதசாஆ.1றான புகார் நான் கொடுத்ததா என்றால் ஆமாம். அந்த புகாரிலும், என்னுடைய குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலத்திலும் நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல விபத்து ஏற்பட்டதாகவோ, நான் அதை கேள்விபட்டதாகவோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதசாஆ.1றான புகாரினை யார் எழுதியது என்றால், அந்த நேரத்தில் காவல் நிலையத்தில் என்னுடன் இருந்த எனது நண்பர் ரவிச்சந்திரன் எழுதினார்.

இந்த விபத்தினை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. எதிரி சரியான திசையில் சாலை விதிகளை அனுசரித்து, இருசக்கர வாகனத்தை சாலையின் இடதுபுறமாக ஓட்டிவந்தார் என்றும், அப்போது எனது தாயார்தான் சாலையின் குறுக்கே திடீரென வந்து இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது தாயார்தான் காரணம் என்றும், எதிரி காரணமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கில் எதிரியை சிக்கவைக்க வேண்டி, நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மற்றும் என்னுடைய குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்கமூலம் ஆகியவைகளில் சொல்லாத விபரத்தை நீதிமன்றத்தில் முரண்பட்டு புதிதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இந்த விபத்தானது நான் சாட்சியம் அளித்ததுபோல ஏற்படவில்லை என்றும், எனது தாயார் சாலையின் குறுக்கே திடீரென வந்ததால் ஏற்பட்டது என்றும், அதை மறைத்து இழப்பீடு பெறுவதற்காக தவறான புகார் காவல் நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்டது என்றும், அதில் கையெழுத்துப்போட்டுவிட்டு அதற்கு ஏற்றார்போல தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.02.13 17:09:43 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.466/2020 –** P.W.2

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. ரவீந்தர் | Father's Name. தர்மராஜ் |
| Village : நாகூர் | Age: 46 |
| Date :13.02.2026 | தொழில் : ஆட்டோ டிரைவர் |

நம்பர்: 9629540368

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13th day of February 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of February 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜர்)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது அமிர்தாநகர், வண்ணான் குளம் மேலக்கரை, நாகூர் என்ற முகவரியில் வசித்துவருகிறேன். இதற்கு முன்பு சாட்சியம் அளித்த அசா.1 ராமன் எனது உடன் பிறந்த தம்பி. நான் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். எனது அப்பா பெயர் தர்மராஜ் அவரை பொதுவாக தர்மலிங்கம் என்றும் அழைப்பார்கள். இந்த விபத்தில் இறந்துபோன வசந்தா எனது தாயார். கடந்த 06.10.2018ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது, எனது நண்பர்

அப்துல்ரஹ்மான் என்பவர் எனக்கு போன் செய்து எனது அம்மாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக தகவல் சொன்னார். நான் உடனடியாக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த எனது அம்மாவை பார்த்தேன். எனது அம்மாவிற்கு தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. எனது அம்மாமீது PY 02 Q 5304 என்ற இருசக்கர வாகனம் மோதியதாகவும், அந்த இருசக்கர வாகன சக்கரத்தில் எனது அம்மாவின் தலைமுடி மாட்டிய பின்னரும், வண்டியை நிறுத்தாமல் சிறிது தூரம் இழுத்து சென்றதாகவும், அந்த வண்டியை சபரிநாதன் என்பவர் ஓட்டியதாகவும் கேள்விப்பட்டேன்.

எனது அம்மாவை மேல் சிகிச்சைக்காக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் இருந்து திருவாருர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு எனது தாயார் அன்றே இறந்துவிட்டார். மறுநாள் போஸ்ட் மார்டம் செய்து ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை, போலிசார் என்னை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் சொன்னேன். இருசக்கர வாகன சக்கரத்தில் எனது அம்மாவின் தலைமுடி மாட்டியதாகவோ, எனது அம்மாவை சிறிது தூரம் இருசக்கர வாகனத்தில் இழுத்து சென்றதாகவோ, என்னுடைய குவிமுச பிரிவு 161னின் படியான வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

விபத்து எப்படி ஏற்பட்டது என்ற விபரத்தை நான் கேள்விப்பட்டதாககூட என்னுடைய குவிமுச பிரிவு 161னின் படியான வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விபத்தினை நேரில்

பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த நாகூர் சாலையானது, மத்தியில் சாலையை இரண்டாக பிரிக்கும் அளவிற்கு வெள்ளைக்கோடுகள் இன்றி அதிக வாகனங்கள் செல்லக்கூடிய பிரதாண சாலை என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் அடிக்கடி வாகன விபத்துக்கள் ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல.

அந்த குறுகிய மற்றும் பிரதாண சாலையில் எனது அம்மா, திடீரென சாலையின் குறுக்கே வந்ததால்தான், இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி சரியான திசையில்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி சாலை விதிகளை அனுசரித்து, ஹாரன் அடித்தும், சரியான திசையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும், அப்போது எனது தாயார்தான் திடீரென அஜாக்கிரதையாக சாலையின் குறுக்கே ஓடிவந்து இந்த விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், இந்த விபத்தில் இறந்துபோனவர் எனது தாயார் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக எனது தம்பி கொடுத்த தவறான புகாருக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.02.13 17:09:54 +0530